**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 200/2021**

நாள் 04.03.2025

PW2 – சரஸ்வதி

க/பெ – பழனிச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2025.)**

**குறுக்கு விசாரணை**

வாதிகள் 1–ம் பிரதிவாதியின் கணவர் சாமிநாதனுடன் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அதேபோல் எந்தெந்த காலையில் எவ்வளவு விஸ்தீர்ணம் உள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எந்தெந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் பெயர் தான் ராமசாமி என்றால் சரிதான். ராமசாமியும், லட்சுமண கவுண்டரும் எப்போது சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. ராமசாமியும், 1–ம் பிரதிவாதியின் கணவர் சாமிநாதனுக்கு சொத்து எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதேபோல் வாதிகள் சாமிநாதனுக்கு சொத்துக்களை பொறுத்து விடுதலை எழுதி கொடுத்ததும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அதேபோல் தாவா சொத்துக்கள் யார் யார் பெயரில் பட்டா, சிட்டா இருந்து வருகிறது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வாதிகள் 15 வருடங்களுக்கு முன்பாகவே பாகம் கேட்டு நோட்டீஸ் அனுப்பிய விபரம் எனக்கு யாரும் சொல்லவில்லை. அதனால், எனக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எந்த விபரமும் தெரியாது என்றும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க

சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்தவொரு பாக உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.03.04 14:00:13 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**